விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 26 வியாழக்கிழமை (12.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 288

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று 12 மணி நேரம் கடும் மோதல்

## 22 இராணுவத்தினர் உயிரிழப்பு இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

முகமாலை, நாகர்கோயில் மற்றும் கிளாலிப் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வலிந்ததாக்குதலில் 22 இராணுவத்தினர் உயிரிழந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

113 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் பலாலி மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## 75 இராணுவத்தின் சடலங்கள் மீட்பு தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வட போர்முனையில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரியளவிலான வலிந்ததாக்குதல் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் 200 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட 75 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப்புலிகளின் இராணுவப்பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் இடம் பெற்றது மிகவும் மோசமான சண்டை!

### க.கா.குழு தெரிவிப்பு

(கொழும்பு)

முகமாலைப் பகுதியில் தற்போதைய சூழல் மிகவும் கடுமையாக உள்ளது என கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இராணுவத் தரப்பில் 75 பேர் கொல்லப்பட்டதாகவும், தங்கள் தரப்பில் 10 பேர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

முகமாலையில் நேற்று இடம் பெற்றது மிக மோசமான சண்டை என்றார். சண்டை நடக்கும் போது அப் பகுதிக்குச் செல்வதென்பது சாத்தியமற்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் சம்பவங்கள் பேச்சை பாதிக்காது

### அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

முகமாலையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் சமாதானப் பேச்சுக்களை பாதிக்காது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படை நிபந்தனைகள் மூலம் இது உறுதிப்படுத்தப் படுவதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தினால் அதற்கு பதில் தாக்குதல் நடாத்தும் வகையில் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை எந்த நிலையிலும் முன்னெடுத்துச் செல்ல அரசு தயாராக இருப்பதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த-ரணில் இன்று சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

பொது வேலைத்திட்டம் குறித்து சிறிலங்கா சுதந்திரகட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து செயற் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யசூசி அகாசி, எரிக்சொல் ஹெய்ம் 15 ஆம் திகதி இலங்கை வருகை!

### பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் குறித்து ஆராய்வர்



(கொழும்பு)

இலங்கைக்கான யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி மற்றும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியோர் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கை வருகின்றனர்.

இவர்கள் இருவரும் சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல்குறித்துப் பேசவுள்ளனர். 15ஆம் திகதி வரும் யசூசி அகாசி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார். அதுவரைக்கும் இலங்கையின் சமாதான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேச்சுக்குத் தயாராகவுள்ள அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதான (04 ஆம் பக்கம் பார்க்க)



## ஆட்டோச் சாரதி சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

தும்பளை வீதியில் ஆட்டோச் சாரதி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

அவர் தனது ஆட்டோவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று உரிய இடத்தில் இறக்கிவிட்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது தும்பளை வீதியில்வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த எமலியாம் தேவராஜா (வயது 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்திய பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-9,52,101)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரமான தகவலை வெளியிடுவதற்கு வட. கிழக்கு ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு

## சர்வதேச நியாயவாதத் தூதுக்குழு அறிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் உட்பட்ட தமிழ் ஊடகங்கள் மீதான அடக்கு முறை, சுதந்தரமான தகவல் வெளியிடுவதனை மட்டுப்படுத்தியுள்ளதாக சர்வதேச ரீதியான நியாயவாதத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன்தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுதந்திர ஊடக அறிக்கை வெளியிடத் தவிர்க்கப்படுவதனால் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பன பாதிக்கப்படுவதாக தூதுக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் உண்மை நிலையை கண்டறிதல் என்ற அடிப்படையில் 12 செய்தி நிறுவனங்களை உள்ளடங்கிய குழு இலங்கைக்கு கடந்த 9 ஆம் திகதி வருகை தந்தது.

இந்நிலையில் நேற்றுக் கொழும்பில் தமது அறிக்கையை வெளியிட்டது. இலங்கையில் இடம்பெறும் ஆட்கடத்தல்கள், துணை ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள் போன்றவை ஊடகத்துறையினர்களுக்கான பாதுகாப்பு நிலையை குறைத்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வை ஆதரிப்பவர்கள் துரோகிகள் என அடையாளப் படுத்தப்படுகின்றனர்.

குற்றஞ்சுமத்தப்பட்ட கொலையாளிகளின் அடையாளம் பற்றிய ஆதாரம் உள்ள போதும் அதிகாரிகளினால் தெரியத்தக்க வகையில் நடவடிக்கைகளை எடுக்கப்படவில்லை எனவும் அக் குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம், இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப்புலிகள், அரசியல் கட்சிகள் மற்றும் ஊடக சமூகம் என்பன பொருத்தமான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென நியாயவாதக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் ஜெனீவா உடன்படிக்கையில் 9-வது பொதுப் பிரிவின் கீழ் யுத்த தரப்பினருக்கான பொறுப்புக்களை நினைவுபடுத்திக் கொள்வதற்காக நியாயவாதக்குழு தமிழ் ஊடகங்கள் மீதான அடக்கு முறைகளை நிறுத்த வேண்டும் என கோரியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் ஆசிரிய பீடத்தினர் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்று கூறிய அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் பற்றுறுதியை அக்குழு வரவேற்றுள்ளது.

இதேவேளை இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் மீதான அடக்கு முறைகளை தமது அமைப்பு தொடர்ந்து அவதானிக்கும் என நியாயவாதக் குழு தெரிவித்துள்ளது. (ச-5)

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நேற்று முன்தினம் அனுஷ்டிப்பு



(கிளிநொச்சி)

முதலாம் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் நினைவுநாள், தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் என்பன தமிழீழத் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள 2ஆம் லெப்.மாலதியின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நேற்று முன்தினம் காலை நினைவு நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வுக்கு படைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் தலைமை தாங்கினார். இதே போன்று பரந்தன் மாவீரர் பணிமனை நடுவப் பணியகம் என்பவற்றிலும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்பட்டது. (எ-1)

# மூத்த பத்திரிகையாளர் கனகரத்னா காலமானார்

மூத்த பத்திரிகையாளர் ஏ.ஜே.கனகரத்னா நேற்றுக் கொழும்பில் காலமானார். சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த அவர் தனது 74-வது வயதில் அமரரானார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலம் தொடக்கம் தனது 60-வது வயது வரை அங்கு ஆங்கில போதனாசிரியராகப் பணியாற்றியவர்.

இவர் ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், இலக்கிய விமர்சனம், பத்திரிகைத் துறை, நவீன சினிமா விமர்சனம், நாடகம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

அத்துடன் Cooperator, Saturday Review, திசை போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக பணியாற்றியவர்.

இதைவிட யாழ்.சம்பத்திரியார் கல்லூரி, மட்டக்களப்பு தம்பிலுவில் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை அவைக்காற்று கழகம், யாழ். திரைப்பட வட்டம் போன்றவற்றின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

இவருக்கு கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' 'இலக்கிய சஞ்சிகை யூன் 2006 இதழில் ஏ.ஜே.சிறப்பிதழ்' ஒன்றை வெளியிட்டு கௌரவித்தது.

அத்துடன் கனடா 'இலக்கியத் தோட்டம்' அமைப்பு அண்மையில் சான்றிதழும் பணமும் வழங்கி மதிப்பளித்தது.

'மாக்ஸிசமும் இலக்கியமும்' 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்' 'மத்து' போன்ற நூல்களின் ஆசிரியரான இவர் சென்ற ஆண்டு 'Selected Works of Regi Siriwardena' என்ற நூலை இரு பாகங்களாகக் தொகுத்து வழங்கியுள்ளார்.



இதைவிட ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் பல்வேறு ஈழத்து இலக்கியங்களை மொழிபெயர்த்து அவற்றை முழு உலகமும் அறிய வகை செய்துள்ளார்.

இவரது உடல், இறுதி அஞ்சலிக்காக இன்று பொரளை எ.வெ.ரெஸ்மொன்ட்ஸ்ல் வைக்கப்பட்டு மாலை 5 மணிக்கு நல்லடக்கத்திற்காக ஜாவத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (ச)

# க.பொ.த. உயர் தர பரீட்சை பெறுபேறுகள்

*சென்.பற்றிக்ஸ் கல்லூரி*

**கலை**

ஏ.துஷ்யந்தன் 3ஏ, ஆர்.ஓ.றெறன்ஸ்3ஏ, ஜே.என்.யூடிக்குமரன் 3ஏ, வி.கோவர்த்தன் 2ஏ பி, எஸ்.எவ்.மகிந்தன் 2ஏ பி, எஸ்.ஜே. சுரேந்திரராஜா 2ஏ பி, ஏ.ஆர்.றொட்னி பிரசாந் 2ஏ சி, ஏ.ஜெபராஜ் ஏ 2பி, ஏ.சியான்ஸ்டன் ஜெனிஸ் ஏ 2பி.

**வணிகம்**

ஆர்.நிஷாந்தன் 3ஏ, ஏ.தினேஷ்ராஜ் ஏ 2பி, கே.பி.சுஜாகரன் ஏ 2பி, ஆர்.எரிக்சனுஜன் 2ஏ பி.

**உயிரியல்**

பி.ரிஸாந்தன் 2ஏ பி, ஜே.என்.பற்றிக் அமலரூபன் ஏ 2பி, ஜே.ஜெயகாந்தன் 2பி சி.

**கணிதம்**

ரி.திவாகர் 3ஏ, எஸ்.ரூபன் 2ஏ பி, ரி.நிமல்ராஜ் 2ஏ சி, டபிள்யு.வினோத் ஏ பி சி, எஸ்.எஸ்.கமில்ரன் 3பி, ஏ.வை.கலிஸ்ரன் கஜேந்திரன் 3பி, பி.ஜே.எம்.சாள்ஸ் ஏ 2பி.

*யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்*

**கலைப்பிரிவு**

இ.சிந்துஜா 3ஏ, ப.பத்மரஞ்சன் 2ஏ பி, சே.சிந்துஜா 2ஏ பி, யோ.சங்கீதா 2ஏ பி, லி.அர்ச்சனா 2ஏ பி, தி.பிரதீபா 2ஏ எஸ், லக்ஷிகா ஏ 2பி, த.மிதிலா ஏ 2பி, க.கீதாஞ்சலி ஏ பி சி, வி.சுதர்ஷினி ஏ பி சி, க.யசோதரன் ஏ பி சி, கே.கஜவரதன் ஏ பி சி, ச. சிந்துஜா ஏ 2சி, ச.அருளமுதா ஏ 2சி, செ.கோகில் 2பி சி.

**வணிகப் பிரிவு**

த.ஜசிந்தன் ஏ 2பி, மே.மேரிஜெனோவா ஏ பி சி, ச.நிருசியா 3பி, அ.றோஜ் மிற்றோன் 3பி, பே.துஷ்யந்தி 2பி சி. (ச)

# கல்விமாணி பாடநெறி ஆசிரிய மாணவருக்கு

தேசிய கல்வி நிறுவகக் கலைமாணிப் பாடநெறி 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்களையும் கல்வி டிப்ளோமா முதலாம் வருட ஆசிரிய மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளர் திருமதி தனலட்சுமி வில்வநாதன் கேட்டுள்ளார். (ச-9)

# திருகோணமலையில் 80 குண்டுகள் மீட்பு

திருகோணமலை பாலைத்தோப்புப் பிரதேசத்திலிருந்து 80 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்தக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய மையம் தெரிவித்துள்ளது. (ச-9)

# 4 ஆயிரம் மாணவர்களுக்கு 3 பாடங்களிலும் 'ஏ' சித்தி

## வர்த்தகப் பிரிவிலேயே அதிகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி அனைத்துப் பிரிவுகளிலும் நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 164 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

இதில் விஞ்ஞானப் பிரிவில் 335 பேரும் கணிதப் பிரிவில் 310 பேரும் வர்த்தகப் பிரிவில் 2 ஆயிரத்து 20 மாணவர்களும் மற்றும் கலைப்பிரிவில் ஆயிரத்து 499 பேரும் இந்த அதிவிசேட சித்தியப் பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் விஞ்ஞானப் பிரிவில் 15 ஆயிரத்து 691 பேர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியைப் பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் 10 ஆயிரத்து 875 பேரும் வர்த்தகப் பிரிவில் 39 ஆயிரத்து 715 பேரும் மற்றும் கலைப்பிரிவில் 53 ஆயிரத்து 494 பேரும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்திலிருந்து 5 ஆயிரத்து 327 பேர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் தோற்றிய 4 லட்சம் பேரில் 19 ஆயிரத்து 741 பேர் தோற்றிய மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை. (ச-5)

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட 5 லொறிச் சாரதிகளுக்கு விளக்கமறியல்

(துன்னாலை)

வடமராட்சியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட 5 லொறிகளும் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## லொறிகளும் தடுத்து வைப்பு

கடமைக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகத்தின் உத்தரவின் பேரில் வல்வையிலுள்ள பொலிஸாராலும் இராணுவத்தினராலும் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மண்ணை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்றை நீதிவான் பார்வையிட்டதையடுத்து அது குறித்துப் பொலிஸாருக்கு அறிவித்தார்.

அதன்போது லொறியும் சாரதியும் கைது செய்யப்பட்டார். அதன்பின் மேற்கொண்ட சோதனைகளின்போது மூன்று சாரதிகளும் ஆறுஉதவியாளர்களும் வல்வையில் வைத்து கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மணலை ஏற்றிச் செல்லும் லொறிச் சாரதிகள் கைது செய்யப்படுவது குறித்துத் தகவல் அறிந்து தப்பியோட முயன்ற ஒரு லொறியை பொலிஸாரும் இராணுவத்தினரும் துரத்தி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு நவிண்டில் உடுப்பிட்டி வீதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

லொறிச் சாரதி இன்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். (ச-101)

உலகம் ஒரு தொட்டில் அல்ல; என்பதை அனுபவம் எமக்குக் கற்பிக்கிறது.

-ப்ராய்டு

வலம்புரி

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த சர்வதேச சமூகம் தயாரா?

சுவிஸ்லாந்தின் தலைநகர் ஜெனீவாவில் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஜெனீவாவில் பேச வேண்டும் என்பது அரசாங்கத்தின் தெரிவு.

விடுதலைப்புலிகளை பொறுத்தவரை அவர்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள்.

இலங்கை இன விவகாரத்தில் சமாதான முயற்சியை ஏற்படுத்துவதில் அயராது பாடுபட்டுவரும் நோர்வே நாட்டில் அரசும் விடுதலைப்புலிகளும் பேசுவது அந்நாட்டையும் கௌரவிப்பதாகவிருக்கும்.

எனினும் நோர்வேயின் சமாதானப் பணியை ஏதோ தானோ என்ற வெறுப்புடன் பார்க்கும் அரசு, பேச்சுவார்த்தையை அந்த நாட்டில் நடத்தவிரும்பாமல் ஜெனீவாவில் நடத்த வேண்டும் என்று கேட்டிருந்தது.

இந்த இடமா? அந்த இடமா? என்ற இழுபறியில் நல்லதொரு சமாதான முயற்சி வீண்போய் விடக்கூடாது என்ற வகையிலும் இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையிலும் ஜெனீவாவில் பேச்சை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பேசுவதற்கான இடத்தெரிவில் விடுதலைப்புலிகள் முரண்டுபிடிப்பர் என்ற அரசின் எதிர்பார்ப்புக்கு தலையடி கொடுத்தது போல், ஜெனீவாவில் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் தெரிவித்த சம்மதம் அமைந்துவிட்டது.

இப்போது ஜெனீவாவில் இருதரப்பும் சந்திப்பதற்கான நாட்களே மிச்சம் என்ற வகையில் நோர்வேயின் முயற்சியுள்ளது.

இந்நிலையில் பேச்சுவார்த்தை மேசையில் பேச வேண்டிய விடயங்களை இப்போதே அரச தரப்புக் கொட்டிக் குதப்புகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை பற்றிய அரச தரப்பின் கருத்துக்கள் பேச்சுவார்த்தையை குழப்புவனவாக அமைந்துள்ளன.

இவை தேவையற்றவை. யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதா? அல்லது அதனை மறுபரீசிலனை செய்வதா? என்ற விடயங்கள் எல்லாம் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து தீர்மானிக்கப்பட வேண்டியவையே தவிர, பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விமர்சிக்கப்படக் கூடியவையல்ல.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அரச தரப்பில் முன்னெடுக்கப்படும் அனைத்துக் கருத்துக்களும்-தேவையற்ற விமர்சனங்களும் நிறுத்தப்பட வேண்டும்.

இதனை செய்வதற்கு சர்வதேச சமூகம் தனது காத்திடமான பணியை ஆற்றுவது தேவையானதாகும். பேச்சுவார்த்தை நடைபெறும் கட்டத்தில் மௌனமாகவிருக்கும் சர்வதேச சமூகம் பின்னர் விடுதலைப்புலிகளை குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டுள்ளது.

சர்வதேசத்தின் இத்தகைய போக்கு இனிமேலும் தொடருமாயின் அதன் விளைவு பாரிய யுத்தமாகவேயிருக்கும்.

எனவே, பொறுப்புள்ள சர்வதேச சமூகம் இலங்கை இனவிவகாரத்துக்கு இறுதித் தீர்வு காணப்படும் வரை தனது கடுமையான முயற்சியை ஆற்ற வேண்டும்.

இதனையே விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகத்திடம் கேட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான இறுதிச் சந்தர்ப்பம் இது என்பது விடுதலைப்புலிகளால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆக, இந்த சந்தர்ப்பத்தை தக்க முறையில் பயன்படுத்த சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

# மீனவர்களின் குடும்பங்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்குச் சென்று அசாதாரண சூழ்நிலைகளினால் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாத மீனவர்களின் குடும்பத்தினர் நிர்க்கதி அடைந்துள்ளனர்.

அவர்கள் தமது நிலை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேற்று மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

தொழில் நிமித்தம் கடலுக்குச் சென்ற மண்டைதீவு, குருநகர், பாசையூர் பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்தஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக கரைக்குத் திரும்ப முடியாமல் வன்னிப் பிரதேசத்தில் சிக்கியுள்ளனர்.

அவர்களின் உழைப்பினை நம்பி வாழும் குடும்பங்கள் ஜீவனோபாயத்திற்கு எதுவித வருமானமுமின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து வன்னியில் உள்ள மீனவர்கள் வள்ளங்களுடன் குடாநாட்டுக்கு உடனடியாக அழைத்து வர அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்துள்ளனர்.

இம்மகஜரின் பிரதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்.ஆயர், யாழ்.மாவட்ட கூட்டுறவு தொழிலாளர் சமாசத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ளன.எந்தவித வருமானமும் அற்ற நிலையில் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களைக் கூட வாங்க வழியற்றவர்களாக குழந்தைகளுடன் பட்டினியால் வாடிவருந்துவதாகவும்,

'தமக்கு. கடற்றொழிலாளர் சமாசத்தினால் மட்டுமே சில உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் அங்கு சமூகமாயிருந்த குடும்ப அங்கத்தவர்கள் தெரிவித்தார்கள்.(ச-133)

# இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு ஆயுதம்

(புதுடில்லி)

இந்திய அரசினால் இலங்கைக்கு ஒரு தொகுதி ஆயுதங்களை அனுப்பியுள்ளதாக இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருள்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை, இந்தியாவிடமிருந்து ஆயுதங்களைக் கோரியிருந்தது. எனினும் அக் கோரிக்கைக்கு ஏற்ப அனைத்து ஆயுதங்களும் வழங்கப்படவில்லை. சிலவற்றையே வழங்கவுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவது இந்தியாவின் கொள்கையல்ல. எனினும் அந் நாட்டில் இறைமையைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து இந்தியப் பாதுகாப்புஆய்வு நிறுவனத்தின் ஊடாக ரேடர் கருவிகள், கடற்படைத் துப்பாக்கிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச)

# கைத்தொழில் துறையில் ஜனாதிபதி விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் ஜனாதிபதி விருது வழங்கல் வைபவம் 2006 கைத்தொழில் துறையில் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடாத்தப்படுகிறது.

இதற்காக சிறிய, நடுத்தரளவுக் கைத்தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழில் துறையில் சுயதொழில் புரிவோர் போன்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் வடமாகாணத்தைச் சேர்ந்த கைத்தொழில் முயற்சியாளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 25.10.2006 ற்கு முன்னர்,

விண்ணப்பப்படிவங்களும் மேலதிக விபரங்களும் மாவட்ட காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (ச)

# 35 தமிழ் இளைஞர்கள் அம்பாறையில் கடத்தல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் 35 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

திருக்கோவில், தம்பட்டை , கோணாவில், விநாயகர்புரம், அக்கரைப்பற்று போன்ற கிராமங்களில் இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்று வருகின்றது. வெள்ளை வானில் செல்வோர் 16 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட தமிழ் இளைஞர்களை கடத்திச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

இக் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவோர் இளைஞர்களின் உறவினர்களை அச்சுறுத்தி விட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக கடத்தப்பட்ட இளைஞர்களின் ஒருசில உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதோடு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறும் கேட்டுள்ளனர். (ச-5)

# மேல்மாகாணத்தில் நேற்று நால்வர் படுகொலை

(கொழும்பு)

களுத்துறை, மருதானை, பம்பலப்பிட்டிய ஆகிய இடங்களில் நேற்று நான்கு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

களுத்துறை, நாகொடைப் பகுதியில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் குறித்த இருவரினது மேலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதில் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

மருதானை மௌலானா தோட்டத்தில்உள்ள வீடொன்றில் வைத்து ஒருவர் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் வீட்டிலிருந்தபோது இனந்தெரியாதோரால் இச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பம்பலப்பிட்டியப் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. (ச)

# துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் கிண்ணியாவில்இடம்பெற்றுள்ளது.

இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள சரஸ்வதி வித்தியாலயத்தில் ஏழாம் ஆண்டு மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்த கதிர்காமப்போடி சிவஞானச்செல்வன்(வயது-32) என்ற ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

துப்பாக்கிச் சூடுபட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# நல்லூர்த் திருவிழாக் காலக் கடைகளின் குத்தகைப் பணத்திற்கு சலுகை வசதி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த் திருவிழாக்காலத்தில் குத்தகைக்கு எடுத்த கடை உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு பெருந்தொகைப் பணம் செலுத்தி கடைகளைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் திடீரென பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.

இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் யாழ்.மாநகரசபை ஆணையாளரிடம் முறையிட்டனர். இவ்விடயத்தை பரிசீலனை செய்த ஆணையாளர், செலுத்திய பணத்தைதிருவிழாக் காலங்களின் எண்ணிக்கையினால் வகுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாட்களுக்கான பணத்தினை கடை குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தெரிவித்துள்ளார். (கு-133)

# வெடி பொருள் அபாயம் பற்றிய எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அபாயம் உள்ள பிரதேசங்கள் என அடையாளம் காணப்படாத கொழும்புத்துறை, பாசையூர், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையைத் தொடர்ந்து வெடிக்காத ஷெல்கள் மற்றும் வெடிபொருள்கள் பரவலாகக் காணப்படுவதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதுகுறித்து.சுமார் 70ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மேற்படி அமைப்பின் செயற்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையையடுத்து அப்பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேறியிருந்தாலும் அவர்கள் அடிக்கடி தங்கள் வீடுகளுக்குச் சென்று வருவதால் வெடிக்காத ஷெல்களினால் அபாயம் ஏற்படக் கூடும் எனவும் இது குறித்து மக்கள் அவதானமாகவிருக்க வேண்டும் எனவும் இவ் வெடி பொருள்கள் குறித்து தமக்குத் தகவல் வழங்குமாறும் அவர் மேலும் கூறினார். (ச-133)

## லெப்.கேணல் அக்பர் வீரச்சாவென அறிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் விசேட கவச எதிர்ப் புப் பிரிவின் சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் அக்பர் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் முகமாலையில் இடம் பெற்ற மோதலிலேயே அவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (ஏ)

## பாடசாலைகள் ஆரம்பம் மாணவர்கள் வரவு அதிகம்

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் மீண் டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. கடந்த ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற அசாதாரண சூழ் நிலையினையடுத்து யாழ்.குடாநாட்டுப் பாட சாலைகள் நடைபெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

இந் நிலையில் நேற்று அனைத்துப் பாட சாலைகளும் ஆரம்பித்தன. மாணவர்கள் அனைவரும் பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நேற்று முதல் முழுமையாக நடைபெற்றது. இதே வேளை வடமராட்சி, தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்கள் பெருமளவா னோர் பாடசாலைக்கு செல்லவில்லை யெனத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, தென்மராட்சியில் நேற்று திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டதால் பாடசாலைச் செயற்பாடுகள் மட் டுப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-133)

## பாடசாலை பெறுபேறுகள் விமானம் மூலம் வந்தன

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை பெறுபேறு கள் நேற்று யாழ்.கல்வி வலயத்தை வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசேட விமானம் மூலம் அப் பெறுபேறு கள் கொண்டுவரப்பட்டதாக கல்வி வலய வட் டாரங்கள் தெரிவித்தன.

அவை உரிய கல்வி வலயங்களுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளன. பாடசாலை களின் அதிபர்கள் தமது பாடசாலை மாண வர்களின் பெறுபேற்றை தமது வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தலைவர் பிரபாவை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்ய விடுக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்த பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட வேண்டு மெனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் முறையீட்டு நீதி மன்றம் விசாரணைக்கு எடுத்தது.

இதற்கு அமைவாக உரிய தரப்புக்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை ஜாதிக ஹெல உறுமய வின் செயலாளர் ஏ.எச்.எம்.ஜி.பி.கொட்டக தெனிய தாக்கல் செய்திருந்தார்.

மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இதற்காக பிரபாகரனை கைது செய்ய பொலிஸ்மா அதிபர் உரிய முறையில் செயற்படுத்தவில்லையென மனுதாரர் குற் றஞ் சுமத்தியுள்ளார். (ச-5)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை யை நீக்கவேண்டும் என்று ஜே.வி.பி.மீண் டும் வலியுறுத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை யை நீக்கிவிட்டு பிரதமருக்கு அதிகாரம் வழங்கப்படும் வகையிலான தேர்தல் முறை மாற்றங்கள் இடம் பெறவேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச எம்.பி.தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தல் முறை ஆலோ சனைக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கட்சியின் நிலைப்பாடுகளை முன்வைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நிலவும் போது அதிகாரம் மிக்க பாராளுமன் றத்தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது நாட்டில் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் இக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது அமுலில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றார் அவர். (ச-5)

## நேரடிப் பேச்சிற்கு இணங்கியமை வரவேற்கத்தக்கது-சொல் ஹெய்ம்

நேரடிப்பேச்சுக்களுக்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது என நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவரும் அமைச்சருமான எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது; இலங்கையின் சமாதான செயற்பாட்டிற் கான சுவிஸ் அரசாங்கத்தின் உறுதியான ஆதரவு மற்றும் தரப்பினரிடையே மீண்டு மொரு சந்திப்பை ஒழுங்கு செய்வதற்கான அதன் விருப்பம் பற்றி எனது ஆழ்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேரடிப் பேச்சுக்களுக்கு இரு தரப்பினரும் விருப்பத்தைத் தெரிவித்திருப்பது மிக வரவேற் கத்தக்கதாகும். கள நிலைமை தொடர்ந்து கஷ்டமாக இருந்த போதிலும் சமாதானச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில் சிறிதொரு ஆனால் முக்கியமானதொரு அடியை எடுத்து வைக்கின்றனர்.

டோக்கியோ இணைத் தலைமை நாடு கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப சந்திப்பொன்று உண்மையிலேயே ஏற்படுவதை உறுதிப்படுத் துவதற்காக இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மோதல் களைத் தவிர்த்துக் கொள்வது முக்கியமாகும் என அமைச்சர் சொல் ஹெய்ம் தெரிவித் தார். (ச-1)



முகமாலையில் வைத்து விடுதலைப்புலிகளால் எடுத்துச் செல்லப் பட்ட இராணுவத்தினரின் சடலங்களைப் படத்தில் காணலாம்.

### யசூசி அகாசி, எரிக்சொல் ஹெய்ம்...

முனைப் புக்களை கட்டியெழுப்பு வதே இவ ரின் நோக்கமென யப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான விசேட தூதுவராக நியமிக் கப்பட்ட பின்னர் அகாசி மேற்கொள்ளும் 13 வது விஜயம் இதுவாகும்.

இதேவேளை இலங்கைக்கான நோர்வே யின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கை வருகி றார் . இவரது இலங்கை விஜயம் முழு சமா தான ஏற்பாடுகள் குறித்ததாக அமையுமென தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யசூசி அகாசியும் எரிக்சொல் ஹெய்மும் விரைவில் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

சுவிஸ்லாந்தில் பேசுவதற்கு இரு தரப் பும் இணைந் துள்ள நிலையில் எரிக்சொல் ஹெய்ம் விஜயம் அமைவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச)

### மோதல்...

அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வா தெரி வித்துள்ளார். விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் தேசிய பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்ள அரசு தயாராகவுள்ளது என அமைச் சர் கூறினார். நேற்று நோர்வேத்தூதுவர் பிறட்ஸ்கரைச் சந்தித்தபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ச)

### முகமாலையில்...

அதேவேளை கொல்லப் பட்ட இராணுவத்தி னரின் சடலங்களை இன்று ஒப்படைக்கவுள் ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள் ளனர்.

இது தொடர்பான மேல் நடவடிக்கைகளில் ஈடுபடுதற்காக அவர்கள் சர்வதேச செஞ்சி லுவைச் சங்கத்தையும் தொடர்பு கொண்டுள் ளனர் என்றார் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் சார்பில் பேச வல்ல அதிகாரி தொர்பினுார் ஓமர்சன். (ச)

### ஜனாதிபதி...

படுவது குறித்து இன்றைய சந்திப்பில் கலந் துரையாடப்படவுள்ளது.

அத்துடன் இரு கட்சிகளுக்கும் இடையே யும் ஏற்படவுள்ள ஒப்பந்தத்தில் இடம் பெற வுள்ள விடயங்கள் குறித்தும் பேசப்படவுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

இரு கட்சிகளுக்குமிடையில் எதிர்வரும் 15 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

### 22 இராணுவத்தினர் உயிரிழப்பு...

நேற்று முகமாலை மற்றும் நாகர்கோயில் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் ஊடுருவுவதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருந்தனர். அத்துடன் ஊடுருவியும் இருந்தனர். இந்நிலையில் பதில் தாக்கு தலை நாம் மேற்கொண்டோம் என்றார் பிரி கேடியர் பிரசாத் சமரசிங்க.

முகமாலை மற்றும் நாகர்கோயில் பகுதியில் பெருஞ்சண்டை நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு அறிவித்த பின்னரே பதில் தாக்குதலை நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

பெருஞ்சண்டைகள் தொடர்ந்தன. நிறைய வீரர்கள் அதில் பயன்படுத்தப்பட்டனர். முறி யடிப்பு மோதலில் பெருமளவான ஆட்லறி மோட்டார் தாக்குதல்கள், விமானத் தாக்குதல் கள் நடத்தப்பட்டன.

விடுதலைப்புலிகளுடனான மோதலில் காயமடைந்தவர்கள் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றார்.

இரு தரப்பிலும் கூறப்படும் கருத்துக்கள் மாறுபடுகின்றன. அதனை எவ்வாறு உறுதி செய்வது கொள்ளமுடியுமென பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவிடம் கேட்டபோது இது குறித்து கண்காணிப்புக்குழுவினர் உறுதி செய்துகொள்ள முடியும் என்றார்.

முன்னரங்கப் பகுதிகளுக்கு கண்காணிப் புக்குழு செல்வதற்கு எந்தவிதத்திலும் தடை யில்லை. அவர்கள் விரும்பினால் அங்கு செல்லாம். ஆனால் முன்னணிக் காவல ரண் பகுதியில் பாதுகாப்பு குறித்து எவரும் உறுதி செய்துகொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பகுதியை இராணுவத்தினர் தகர்க்க முயன் றது எனக்கூறுவது தவறானது. அவர்கள் ஓகஸ்ட் 11 ஆம் திகதி எங்களைத் தாக்கினார் கள். நாம் சிறிது பின்வாங்கி எமது நிலை யை மீண்டும் பிடித்தோம்.

நேற்று விடுதலைப்புலிகளின் முன்னரங் கப் பகுதியை நாங்கள் தாக்கவில்லை. அவர்கள் தாக்கினர். நாங்களும் பதில் தாக் குதலை மட்டுமே நடத்தினோம் என்றார் பிரி கேடியர் பிரசாத் சமரசிங்க. (எ-1)


கலைப் பிரிவு
DAY CLASS
ஆரம்பம்
14.10.2006
காலை 8 மணி
தமிழ் - மீரா
அளவையியல் - மோகன்
நாடகம் - கனகேஸ்வரன்
அரசியல் - இளங்கோ
இந்து நாகரிகம் - ஜோதீஷ்வரன்
கிறிஸ்தவம் - மல்லிகா
புவியியல் - இக்னேசியஸ்
ஆங்கிலம் - சுதர்சன்
DMI Jaffna
(C-518)


### 75 இராணுவத்தின் சடலங்கள்...

இராணுவத்தினரின் 4 டாங்கிகள் விடு தலைப்புலிகளால் தாக்கப்பட்டுள்ளன. பல நூற்றுக்கணக்கான போராயுதங்கள் விடு தலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தரப்பைச் சேர்ந்த ஒருவரும் விடுதலைப்புலிகளால் பிடிக்கப்பட்டுள்ளார். வட போர் முனையில் முகமாலை முதல் கிளாலி வரையான முன்னரங்கப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் நேற்று புதன் கிழமை காலை 6.30 மணி முதல் செறி வான எறிகணைச் சூட்டாதரவுடன் விடுதலைப் புலிகளின் முன்னரங்குகளை நோக்கிப் பாரியளவில் முன்னகர்ந்தனர்.

முன்னகர்ந்த படையினர் விடுதலைப்புலி களின் முன்னரங்க நிலைக்குள் ஊடுருவிய நிலையில், விடுதலைப்புலிகள் தீவிரமாக பதில் தாக்குதலை தொடுத்தனர்.

நேற்று மாலை 6.30 மணிவரை விடு தலைப்புலிகள் மேற்கொண்ட தீவிர முறியடிப் புத் தாக்குதலால் இராணுவத்தினர் பாரிய இழப்புக்களுடன் அழிவுகளுடனும் பழைய நிலைக்குத் திரும்பினர்.

இந்த முறியடிப்புத் தாக்குதலின்போது இராணுவத்தினரின் டாங்கிகள் நான்கு விடு தலைப்புலிகளால் தாக்கப்பட்டுள்ளன.

தாக்குதல்களில் தமது டாங்கிகளில் சிக்கி யும் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள் ளனர். டாங்கிகளில் சிக்கிக்கொல்லப்பட்ட இராணுவச் சடலங்களும் விடுதலைப்புலிக ளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டது. கொல்லப்பட்ட இராணு வச் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங் கத்தினூடாக அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்காக கிளிநொச்சிக்குக் கொண்டு வரப்படுகின்றன என அவர் நேற் றிரவு தெரிவித்தார்.

இராணுவத்தினரின் சடலங்களை பொதி செய்வதற்கான பைகளை சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் வழங்கியுள்ளது.

நேற்றைய தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தினரை இராணுவத்தரப்பு வர ணிக்கு வாகனங்கள் மூலம் கொண்டு சென்று அங்கிருந்து மூன்று உலங்கு வானூர்தி மூலம் பலாலிக்கும் அங்கிருந்து கொழும் புக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என இளந்திரையன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமது தரப்பில் 4 துணைப் படை வீரர்கள் உட்பட 10 பேர் வீரச்சாவடைந் ததாக அவர் தெரிவித்தார். (எ-1)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.